රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Services, Provincial Councils and Local Government

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන தொலைபேசி: (94) 011- 2696211-13 Telephone (94) 011- 2166000
ෆැක්ස් தொலைநகல்: (94) 011- 2695279 Fax
ඊ-මේල් மின்னஞ்சல்: information@pubad.gov.lk E-mail
වෙබ් අඩවිය இணையத்தளம்: www.pubad.gov.lk Web Site

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No | PS/GT/2020 (IIIවෙළුම) | |
| ඔබගේ අංකය / உமது இல / Your No | | |
| දිනය / திகதி: / Date | 2022.01.07 | |

அமைச்சுக்களின் செயலாளர்கள்/ இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்
மாவட்ட செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் - 2020 இணைந்த சேவைக்கு நிரந்தர நியமனம் பெற்றுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் நிரந்தரப் பயிற்சிக்காக சேவை நிலையங்களில் இணைக்கப்பட்டுள்ள பயிலுநர்களும் கடமைப் பொறுப்பேற்றல்</u>**

மேற்படி விடயம் தொடர்பில் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2022.01.03 ஆம் திகதிய கடிதம் தொடர்பில் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

02. அதனடிப்படையில் மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2022.01.03 ஆம் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நிரந்தர நியமனங்களைப் பெறும் உத்தியோகத்தர்கள் சேவையில் இணைக்கப்படும் சேவை நிலையங்களை அந்த உத்தியோகத்தர்கள் அறிந்துகொள்வதற்காக அவற்றின் விபரங்கள் இத்துடன் வெளியிடப்படுகின்றன.

- https://bit.ly/3zzQ1YH

03. மேலும் நீங்கள் முன்வைத்த பதவியணித் தேவைப்பாடுகளையும் கவனத்தில் எடுத்து உங்கள் நிறுவனத்தில் சேவையில் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியலைப் பின்வரும் இணைப்பில் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

- https://bit.ly/3G2JmZy

04. அத்துடன் கடமைக்குச் சமுகமளிக்கும் போதும் கடமைகளை ஒப்படைக்கும் போதும் உத்தியோகத்தர்களும் அதேபோன்று நிறுவனத் தலைவர்களும் MISCO முறைமையைப் பயன்படுத்த வேண்டிய முறையைக் காட்டும் தொழில்நுட்ப அறிவுறுத்தல்களையும் மேற்படி இணைப்புக்களில் பிரவேசிப்பதன் மூலம் தனித் தனியாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதைப் பணிவுடன் அறியத் தருகின்றேன்.

05. உத்தியோகத்தர்களுக்கான கடமைகளை ஒப்படைப்பதற்குப் பொருத்தமான நேர அட்டவணையொன்று உங்கள் வசதிக்காக முன்மொழியப்பட்டுள்ளதுடன், அதற்கிணங்க செயற்பட முடியுமாயின் தடங்கல்கள் இன்றி உத்தியோகத்தர்களுக்கு கடமைகளை ஒப்படைக்கும் பணியை மேற்கொள்ள முடியும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

குறிப்பு - ஏதேனும் ஒரு விசேட நிலைமையில் திணைக்களத் தலைவர்கள் வேறு விதத்திலான திட்டமொன்றின்றின் அடிப்படையில் கடமைகளை ஒப்படைப்பதற்குத் திட்டமிடுவதாயின், அதற்காக மேற்குறித்த நேர அட்டவணையைத் தடையாக அமைய மாட்டாது, என்பதுடன் MISCO முறைமையில் கடமைகளைப் பொறுப்பேற்பதைப் பதிவு செய்வதும் அதன் மூலம் பதிவிறக்கப்பட்ட அரச சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகளின் 03 மற்றும் 04 ஆம் பிற்சேர்க்கைகளை இந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்துவது கட்டாயமானது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

06. குறித்த திணைக்களத்தலைவர்களின் அழைப்பின் படி புதிய சேவை நிலையங்களில் கடமைப் பொறுப்பேற்கும்படி புதிய நியமனதாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

07. இந்நிகழ்ச்சியில் எவரேனும் ஒரு ஆளுக்கு சேவை நிலையம் காட்சியளிக்காமல் போவதற்கும் நியமனக் கடிதமொன்று கிடைக்காமல் போவதற்கும் பின்வரும் விடயங்கள் காரணமாக அமைய முடியும்.

i. பயிலுநர்கள் எந்தவொரு தரவையும் உள்ளீடு செய்திருக்காமை, உள்ளீடு செய்த தரவுகள் முழுமையற்றவையாகக் காணப்படுதல்.

ii. சில பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்படும் இற்றைப்படுத்தல்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகள்

iii. கல்வித் தகைமைகள் தொடர்பில் மேலதிக விசாரணைகளுக்காக கோரப்படும் ஆவணங்களை ஒப்படைக்காமை போன்ற விடயங்கள்

iv. மாகாண சபைகள் (Province)/ மாகாண பாடசாலைகள் (Provincial School), தேசிய பாடசாலைகள் (National School) மற்றும் அரசாங்க சேவை (Public) என்பவற்றுக்கு இடையில் ஏற்படும் நிர்ணயித்தல் தொடர்பான பிரச்சினைகள்

v. பெருந்தொகையான தரவுகள் பயன்படுத்தப்படுவதனால் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகள்

08. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உத்தியோகத்தர்களுக்கு கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு போதுமான அளவு காலம் நியமனக் கடிதத்தின் ஏற்பாடுகள் மூலம் வழங்கப்பட்டுள்ளதனால் அடுத்து வரும் ஒரு வாரத்திற்குள் மேற்குறித்த பிரச்சினைகளைத் தீர்த்து தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அனைத்துப் பயிலுநர்களுக்கும் நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

09. மேற்குறித்த பிரச்சினைக்காகப் பயன்படுத்தப்படும் நியாயமான காலப் பகுதியில் கடமைகளைப் பொறுப்பேற்கும் போது உத்தியோகத்தர்களின் சேவை மூப்புக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படமாட்டாது.

10. 2022.04.01 ஆம் திகதியைக் கொண்டதாக இணைந்த சேவையில் நிரந்தர நியமனங்கள் பெறவுள்ள பயிலுநர்களை 2022.01.03 திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நிரந்தர அடிப்படையில் சேவை நிலைய சேவையில் இணைப்பதற்கான கடிதங்களையும் உரிய மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள அதேவேளை அந்தப் பயிலுநர்களுக்கு குறித்த சேவை நிலையங்களில் பயிற்சியளிப்பதற்கான கடிதங்கள் கிடைக்கப் பெற்ற பின்னர் அந்த சேவை நிலையங்களிலிருந்து விடுவிப்புப் பெற்று புதிய சேவை நிலையங்களுக்குச் செல்தல் வேண்டும். அந்தப் பயிலுநர்கள் கடமைக்குச் சமுகமளிப்பதற்கு MISCO தொகுதியின் பயன்படுத்தப்படமாட்டாது.

கவனிக்கவும் - இந்தப் பயிலுநர்களில் கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ள பயிலுநர்கள் அந்த அமைச்சிடமிருந்து அழைப்பு வரும் வரை தற்காலிகமாக ஏற்கனவே உள்ள சேவை நிலையங்களில் கடமைக்குச் சமுகமளித்தல் வேண்டும்.

11. மேற்படி விடயம் தொடர்பில் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2022.01.03 ஆம் திகதிய கடிதத்தின் 4, 5 மற்றும் 6 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மீண்டும் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவை பணிப்பாளர் நாயகம்